# ‘‘மற்ற ஒன்பது பேர் எங்கே?’’ [லூக்கா 17:11-19]

நாம் வாழும் இந்நாட்களில் உள்ள பெரிய தேவைகளில் ஒன்று நன்றியுடைமையாகும். நாம் அதிகமாய் ஆசிர்வாதங்கள் பெற்றுள்ளோம்; ஆனால் அந்த ஆசீர்வாதங்கள் பற்றி நன்றியுணர்வற்றுக் காணப்படுகிறோம். பவுல், ‘‘தேவன் படைத்ததெல்லாம் நல்லதாய் இருக்கிறது; ஸ்தோத்திரத்தோடு ஏற்றுக் கொள்ளப்படுமாகில், ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல’’ (1 தீமோ. 4:4), என்று எழுதினார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதினவரும்கூட, “ஆதலால், அசைவில்லாத இராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம்” (எபிரெயர் 12:28) என்று கூறினார். கொலோசெயர் 2:7ன் படி, நாம் “ஸ்தோத்திரத்தோடே பெருக வேண்டியவர்களாய்” இருக்கிறோம். உண்மையாகவே இந்தப் பாடம், நமது சிந்தனைக்கு அதிகமாய் அறிவூட்டுவதைப் பார்க்கிலும், நமது இருதயத்தை தூண்டிவிட்டு, நமது மனச்சாட்சியைக் குத்துவதையே மேலான நோக்கமாய் கொண்டுள்ளது (2 பேது. 1:12-14).

## இயேசுவின் நாட்களில் நன்றியின்மை

லூக்கா 17ல் “பின்பு அவர் எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகையில்” (வ. 11அ) என்று கூறப்படுகிறது. “எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகையில்” என்ற இக்கருத்து லூக்காவின் நூலில் மூன்றாவது முறையாக இவ்விடத்தில் காணப்படுகிறது.[1] சிலுவையில் அறையப்பட காலம் சமீபமாயிருந்தது. “பின்பு அவர் ... சமாரியா, கலிலேயா என்னும் நாடுகளின் வழியாக நடந்து போனார்’’ (வ. 11ஆ). NIV மொழிபெயர்ப்பில்,

"சமாரியா கலிலேயா நாடுகளின் இடையிலிருந்த எல்லைகளின் வழியே இயேசு பயணம் செய்தார்" என்று கூறப்படுகிறது. இயேசு யோர்தான் நதியின் மேற்குப்புறத்தில் பிரயாணம் செய்திருக்கவேண்டும். "அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்த போது ..." (வ. 12அ). லூக்கா அந்த கிராமத்தின் பெயரைத் தர வில்லை; அது அவ்வளவு முக்கியமல்ல.

இயேசு அந்த கிராமத்தில் பிரவேசித்தபோது, "குஷ்ட ரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று" (வ. 12ஆ). மக்கள் வசிக்கும் கிராமம், நகரம் இவற்றிற்குள், குஷ்டரோகம் உள்ள மனுஷர் வரமுடியாது. ஆனால் அவர்கள் நகர எல்லைகளில் நின்றுகொண்டு பிச்சை யெடுக்கலாம்.[2] இந்த மனிதர்கள் இயேசு அந்த கிராமத்திற்குள் பிரவேசிக்கப்போகையில் கிராமத்தின் நுழைவாயிலில் இருந்தி ருக்கவேண்டும். அவர்களில் ஒருவன் சமாரியன் ஆவான் (வ. 16). இயேசு இதற்குப்பின் கூறுவதன்படி, மீதமுள்ளவர்களில் அநேகம் பேர் அல்லது அனைவருமே யூதர்கள் ஆவார்கள் (வ. 18). பரிதாபமான சூழ்நிலைகள், பரம விரோதிகளான யூதரையும் சமாரியர்களையும்[3] ஒன்றாக்கியிருந்தது. வெள்ளம் பெருக்கெடுத்தால், வெட்டாந்தரைத் தீவில் உள்ள ஆடுகளும் ஓநாய்களும், ஒருசேர அழிவது உறுதியாகும். அது போலவே தான் இங்கும் நடந்துள்ளது.

இந்த சம்பவத்தை முழுமையாக உணர்ந்துகொள்ள வேண்டுமெனில், இந்த மனுஷர் பெற்றிருந்த நோயின் தன்மை பற்றி நாம் அறியவேண்டியது அவசியமாகும். வேதத்தில் குஷ்டரோகம் என்றழைக்கப்படும் இவ்வியாதி பயங்கர மானதும், எளிதில் தொற்றிக்கொள்ளக்கூடியதுமாயிருந்தது.[4] இந்த வியாதியைப்பற்றிப் படித்தவர்கள், இவ்வியாதி பார்க் கவே அருவருப்பானது என்கின்றனர். முதலாவதாக இவ் வியாதி தோலின் நிறத்தை இளஞ்சிகப்பு, மரநிறம், கருப்பு எனப் படிப்படியாக மாற்றுகிறது. பின்பு அரிக்கக்கூடிய புண்கள் உண்டாகி தோலையும் எலும்பையும் ஒருசேர வேகமாய் அரித்து அழிக்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்குள் மரணம் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது ஆகும்.

விரலில்லாத கைகளையும், கையில்லாத புஜங்களையும் தூக்கிக்கொண்டு தள்ளிவைக்கப்பட்ட இந்தப் பத்துப் பேர்

வருவதை சற்று நீங்கள் கற்பனை செய்து பாருங்கள். அவர்களுக்குக் கண்கள், காதுகள் மற்றும் மூக்குகள்கூட இல்லாமல் போயிருக்கலாம். இவர்கள் அழுக்கான, தளர்ந்துபோன, சரீரமுடையவர்களாய், குடும்பத்தாரால் வெறுக்கப்பட்டு, வேலை எதுவுமின்றி, சாதாரண வாழ்க்கைகூட இன்றி அவதிப்பட்டவர்கள். குஷ்ட வியாதி என்பது பலவீனப்படுத்துவதோடு, சிறுமைப்படுத்தக் கூடியதாகவும் இருந்தது.

வசனம் 12ல் அவர்கள் "தூரத்திலே நின்றதாக" க் குறிப்பிடுகின்றது. நியாயப்பிரமாணம், குஷ்டரோகிகள் தூரத்தில் நிற்க வேண்டும் என்று கூறுகிறது. எவ்வளவு தூரம் என்று பிரமாணத்தில் குறிப்பிடவில்லை. ஆனால், ரபீ ஒருவர் இத்தூரம் ஐம்பது முழங்கள் ஆகும் என்று எழுதி வைத்துள்ளார். இது ஏறக்குறைய ஐம்பது கஜங்களாகும் - அதாவது கால்பந்து விளையாட்டு மைதானத்தின் நீளத்தில் பாதியாகும்.[5]

இந்தப் பத்துக் குஷ்டரோகிகள் இயேசுவைக் கண்ட பொழுது, "சத்தமிட்டார்கள்" (வ. 13ஆ) என்றுள்ளது. இவ் வியாதி அவர்களது தொண்டையைக்கூடப் பாதித்து இருந்தது, இதனோடு நெருக்கமான இன்னொரு வியாதி எலும்புருக்கி நோய் ஆகும். அவர்கள் குரல் கரகரப்பாகவும், கடுமையாகவும் இருந்தது. இங்கு பத்து மனிதர்கள், ஐம்பது கஜ தூரத்திலிருந்து, ஈனக் குரலில் கதறி, இயேசுவின் கவனத்தைக் கவர முயற்சி செய்கின்றனர். அவர்கள், "இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும்" என்று சத்தமிட்டார்கள் (வ. 13). அவர்கள் குணமடைய விரும்பினதில் சந்தேகமில்லை, ஆனால் குறிப்பாக அவர்கள் இரக்கம் வேண்டுமென்று கேட்டார்கள். தயவும், தங்களைப் பற்றிப் புரிந்துகொள்ளும் தன்மையும் வேண்டுமென்றார்கள். அவர்கள் தங்கள் சரீரத்தில் மட்டுமல்லாது, இருதயத்திலும், ஆத்துமாவிலும் குணமடைய விரும்பினார்கள்.

வசனம்14ல் "அவர்களை அவர் பார்த்து. ..." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு இரைச்சலிடும் கூட்டத்தாரால் சூழப்பட்டிருந்தார். முதன் முறை இவர்கள் சத்தமிட்ட நேரத்தில் அவருக்குக் கேட்காமல் இருந்திருக்கலாம். அவர் அச்சத்தத்தைக் கேட்டபொழுது, அவர்களை தூரத்தில் நிற்கக் கண்டார். அவர்களை அவர் பார்த்து; "நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள்" என்றார் (வ. 14அ).

இதற்கு முன்பு இயேசு வேறொரு குஷ்டரோகியைக் குணப்படுத்தியிருந்தார். அந்த சம்பவத்தில், இயேசு அவனைத் தொட்டு, “சுத்தமாகு” (லூக். 5:13) என்றார். அவ்வாறு அவன் குணமடைந்தபின் நியாயப்பிரமாணச் சட்டத்தின்படி அவனை ஆசாரியர்களிடம் சென்று காண்பிக்கச் சொன்னார். ஆரோக்கிய ஆய்வாளர்களாகப் பணிபுரிவது ஆசாரியர்களின் வேலைகளில் ஒன்றாக இருந்தது.[6] ஆசாரியர்கள், ஒரு குஷ்டரோகி குணமடைந்ததாக முடிவு செய்துவிட்டால், அம்மனிதன் சில பலிகளைச் செலுத்தி, பிறகு சமுதாயத்தில் மறுபடி பிரவேசிக்க முடியும். அவன் மறுபடியும் தனது இல்லம் சென்று, வேலைக்குத் திரும்பி, ஆலயத்துக்கும் போகலாம்.

இருப்பினும் இந்த சம்பவத்தில், இயேசு அந்த குஷ்டரோகிகளிடம் செல்லவோ தொடவோ அல்லது அந்த இடத்திலேயே குணப்படுத்தவோ கிடையாது.[7] மாறாக அவர்களின் விசுவாசத்திற்கு ஒரு பரீட்சையின் மூலம்[8] அவர்களுக்கு அறைகூவல் விடுத்தார். அதாவது அவர்கள் ஏற்கனவே குணமாகி விட்டது போல, அவர்களை ஆசாரியர்களிடம் சென்று காண்பிக்கும்படி கூறினார்! (NIV மொழிபெயர்ப்பில் இச்சம்பவம் நடந்த இடமாக குறிப்பிடும் இடம்-கலிலேயா சமாரியாவின் எல்லை-சரியானதென்றால், இந்தப் பத்து குஷ்டரோகிகளும் எருசலேமுக்குச் செல்ல தொலைதூரம் நடக்க வேண்டியதாகும்).

இந்த சம்பவத்தின் அடுத்த பாகம் பிரமிப்பூட்டுவதாயுள்ளது: “அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்” (லூக். 17:14இ). அந்த சமாரியன் திரும்பிவந்து நன்றி கூறியதால், அந்தப் பத்துப் பேரும் குணமாகுமுன் வெகுதூரம் போய் விடவில்லை என்றே நான் யூகிக்கிறேன். அவர்கள் சரீரம் அற்புதமாய் குணம் பெற்றதை சற்று கற்பனை செய்து பாருங்கள்-அவர்களின் கண்கள், காதுகள், தொண்டை ஆகியன குணம் பெற்றன; புண்களில் இருந்து செதில்கள் கீழே விழ, தோலும் மிகவும் ஆரோக்கியம் பெற்றது; புதிதாய் எலும்புகள் உண்டாகி, நரம்பு, இரத்தக் குழாய் ஆகியவற்றுடன் இணைந்த புதிய தசைகள் அவற்றை மூடிக்கொள்ள, அந்த பாகம் முழுமையையும் புதிய தோல் மூடிற்று; ஆரோக்கியமும், வலிமையும் அவர்கள் சரீர முழுவதும் கரைபுரண்டோடியது! அவர்கள் இருதயம் எவ்வளவு களிப்பினால் நிறைந்திருக்கும்! “நான் மறு

படியும் முழு மனிதனானேன்'' ''நான் மறுபடியும் இல்லம் செல்லமுடியும்'' ''நான் மறுபடியும் சமுதாயத்தில் திரும்பிச் சேரமுடியும்'' ''நான் மறுபடியும் ஆலயம் செல்லமுடியும்.''

இந்தப் பத்து மனிதர்களிடையே இருந்த ஒப்புமைகளைக் கவனியுங்கள்: (1) அனைவருமே பயங்கரமான நோயினால் பாதிப்பு அடைந்தவர்கள். (2) அனைவருமே அதைப்பற்றி ஏதாவது செய்யவேண்டும் என்று தீர்மானித்தனர். (3) அனைவருமே இயேசு எப்படியும் தங்களுக்கு உதவமுடியும் என்று விசுவாசித்தனர். (4) அனைவருமே இயேசுவிடம் வேண்டுகோள் விடுத்தனர். (5) அனைவருமே இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து ஆசாரியர்கள் இருப்பிடம் நோக்கி நடந்தனர். (6) அனைவருமே குணமாக்கப்பட்டனர். இவ்விடத்தில் அவர்களிடையே காணப்பட்ட ஒப்புமை முடிவடைகிறது. வசனம் 15 ''அவர்களில் ஒருவன்'' என்று தொடங்குகிறது. அடுத்த கணத்தில் நாம் இவன் சமாரியன் என்று அறிந்து கொள்வோம். ''அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பி வந்து'' (வ. 15அ). இதன் பிறகு இயேசு கட்டளையிட்ட பயணத்தை அவன் தொடர்ந்திருப்பான் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.[9] இருப்பினும் முதலில் தனக்குள் பொங்கியெழுந்த நன்றியுணர்வை வெளிக்காட்ட அவன் விரும்பினான்.

அவன் ''திரும்பி வந்து தேவனை மகிமைப்படுத்தினான்'' (வ. 15அ). தேவனே இந்த குணமாக்கும் வல்லமையை இயேசுவுக்குத் தந்தார் என்பதை அவன் புரிந்துகொண்டான். அவன் ''உரத்த சத்தத்தோடே'' தேவனை மகிமைப்படுத்தினான் (வ. 15ஆ) - அது குஷ்டரோகியின் கதறலாய் அல்ல, மாறாக, குணமான மனிதனின் பலமுள்ள குரலாயிருந்தது! அவன் ''(இயேசுவினுடைய) அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான்'' (வ. 16அ). அவன் இயேசுவின் தெய்வீகத்தைப் புரிந்துகொண்டு, அவர் பாதத்தில் விழுந்து, அவரை வணங்கி, அவருக்கு நன்றி செலுத்தினான். ''ஸ்தோத்திரம் செலுத்தினான்'' என்பது கிரேக்க மொழியில் நிகழ்கால வினையிலிருப்பதால் அவன் தொடர்ந்து இயேசுவுக்கு நன்றி செலுத்திக்கொண்டிருந்தான் என்பது தெளிவு.

*அடுத்து வரும் ஒரு சிறிய வாக்கியம் இந்தப் பகுதியில் உள்ள வைகளிலேயே, திடுக்கிடச் செய்யும் வாக்கியமாகும். "அவன் சமாரியனாயிருந்தான்" (வ. 16ஆ). நம்மிடம் நன்றி செலுத்த மாட்டார்கள் என்று நாம் நினைப்பவர்கள்தான் பெரும்பாலும் அதிக நன்றி செலுத்துகிறார்கள், ஆனால் நாம் யாரிடம் அதிக நன்றியுணர்வை எதிர்பார்க்கின்றோமோ அவர்கள் அதைக் கண்டுகொள்வது கிடையாது.*

*வசனம் 17ல் இயேசுவின் வார்த்தைகளில் உள்ள கவலை யுணர்வை நீங்கள் கேட்கமுடிகிறதா?: அப்பொழுது இயேசு; "சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா? மற்ற ஒன்பதுபேர் எங்கே?" யார் ஒருவரும் அந்தப் பத்துப்பேரும் திரும்ப வந்து எவ்வித முன்னேற்பாடுமின்றி, குழுவாக இணைந்து,*

*என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி;*
*என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை*
*ஸ்தோத்தரி.*
*என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி;*
*அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே;*
*அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து;*
*உன் நோய்களையெல்லாம் குணமாக்கி;*
*உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு; ...*
*கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது*
*போலாகிறது (வ.1-5).*

*என்று, சங்கீதம் 103ஐப் பாடியிருக்கவேண்டும் என்றே எதிர்பார்ப்பார்.*

*இருப்பினும் இவர்கள் இதைச் செய்யவில்லை. ஏன்? பர்ட்டன் காஃப்மேன் என்பவர் இதைப்பற்றி இலகுவாக கவிதை நடை ஆலோசனையொன்று தருகிறார்:*

*ஒருவன் தான் குணமானது நிஜமா என்றறியக்*
*காத்திருந்தான்.*
*ஒருவன் அது நீடித்த குணமா என்று காணக் காத்திருந்தான்.*
*ஒருவன் இயேசுவைப் பிறகு பார்ப்பேன் என்றான்.*
*ஒருவன் தனக்கு ஒருபொழுதும் குஷ்ட வியாதி*
*இருந்ததில்லை என்று முடிவெடுத்தான்.*
*ஒருவன் எப்படியோ குணமானேன்! என்றான்.*
*ஒருவன் ஆசாரியர்களை மகிமைப்படுத்தினான்.*
*ஒருவன் "இயேசு ஒன்றுமே செய்யவில்லையே" என்றான்.*
*ஒருவன் "எந்த ஒரு ரபீயும் இதைச் செய்யக் கூடும்"*
*என்றான்.*

ஒருவன் "நான் ஏற்கனவே குணமாகியிருந்தேன்"
என்றான்.[10]

பிறகு இயேசு, "தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பி வரக்காணோமே" என்று கவலையுடன் கேட்டார் (வ. 18). "அந்நியன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட மூலபாஷையின் வார்த்தையானது, புறஜாதியாரின் மண்டபத்திலிருந்து, பெண்கள் மண்டபத் திற்குச் செல்லும் நூழைவாயிலில் உள்ள அறிவிப்பில் இருப் பதாகும்: "உள்ளே உள்ள இந்த எல்லையையும், ஆலயத்தைத் சுற்றியுள்ள பாதுகாப்பு வேலியையும் வேற்று தேசத்தைச் சேர்ந்த எவரும் தாண்டி வரக்கூடாது. அப்படிச் செய்ததாகப் பிடிக்கப்படுகிறவர்கள் தங்கள் மரணத்திற்குத் தாங்களே காரணமாவார்கள்.'' முறைமையின்படி இந்த மனிதன் தேவலாயத்தினுள் செல்லமுடியாது, ஆனால் இயேசுவிடம் வர முடியும்.

இயேசு தமது கால்களில் விழுந்து வணங்கிய சமாரியனிடம் திரும்பினார். அவனை நோக்கி: "நீ எழுந்து போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது'' என்றார் (வ. 19). ''உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று கூறும்பொழுது அவர் வெளிப் படையாகவே விவரித்திருக்கலாம். இருப்பினும் அந்த மனிதன் நன்றியுள்ளவனாய் இருந்ததால், அவனுக்கு விசேஷித்த ஆசீர் வாதத்தைக் கூறினார். மற்ற ஒன்பது யூதர்களும்கூட சரீரத்தில் முழு குணத்தைப் பெற்றார்களே. மூலபாஷையிலும் இது, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது''[11] என்றுதான் உள்ளது. நிச்சயமாகவே இவ்விடத்தில் இயேசு, "உன் விசுவாசமும் அதை நீ நன்றி செலுத்துவதில் வெளிக்காட்டிய முறையுமே[12] உனக்கு சரீரத்திலும், ஆவியிலும் குணமளித்தது" என்று கூறியிருப்பார், அதாவது, "உன் வீட்டுக்கு இரட்சிப்பு கிடைத்தது" (லூக். 19:9).

## நமது நாட்களில் நன்றியில்லாமை

நாம் இச்சம்பவத்தின் ஒரு புறத்தில் உள்ளவைகளை அள வீடு செய்துகொண்டிருக்கிறோம்: பத்துப் பேரில் ஒருவனே-10 சத விகிதமே-திரும்ப வந்து இயேசுவுக்கு நன்றி செலுத்தினான் -இது நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. இவ்விடத்தில் நாம் நின்று, நிதானித்துப் பார்க்கிறோம். இந்நாட்களில் இந்த

*சதவிகிதம் சற்றாவது உயர்ந்திருக்கிறதா?*

*நன்றியில்லாமை என்பது மோசமானதாகும் என்று நாம் அனைவரும் அறிவோம். ஆனால், இந்த அறிவு நம்முடைய வாழ்க்கையில் உண்மையில் எந்த அளவுக்கு விளைவு ஏற்படுத்தி யுள்ளது? அநேக வருடங்களுக்கு முன்னதாக, ஒரு பத்திரிகை யில் முழுப்பக்க விளக்கப்படம் ஒன்றை, "நன்றியில்லாமை" என்ற தலைப்பின்கீழ் நான் பார்த்தேன். அப்படத்தின் நடுவில் "நன்றியில்லாமை" என்ற பெயரோடு சிதைந்த உருவம் ஒன்று நின்றுகொண்டிருக்க, அவ்வுருவத்தைச் சுற்றியிருந்தவர்கள் கூட்டமாய்க் கூடி அதன் மேல் கல்லெறிந்த ஒவ்வொருவரின் கையிலும் "நன்றியில்லாமை" என்ற அடையாளம் காணப் பட்டது. இவ்விதமாய் அந்த படத்தை வரைந்தவர், "நாம் மற்றவர்களின் நன்றியில்லாமை குறித்து கண்டனம் பண்ணிப் பேசுகிறோம்; ஆனால் நம் ஒவ்வொருவர் இதயத்திலும் இக் குணம் சிறிதளவாவது இருக்கின்றது" என்ற தமது உறுதியான கருத்தை வெளிப்படுத்துகிறார். பத்துப் பேரில் இயேசுவுக்கு நன்றி செலுத்த திரும்பி வந்த ஒருவனைக் குறித்த இச்சம் பவத்தைப் படிக்கும் வேளையில், நாம் ஒவ்வொருவரும், நம்மையே கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்வி: "எனது நன்றி யுடைமையின் அளவு என்ன?" என்பதே.*

*நன்றியுடைமைக்கு வேதாகமம் அதிக முக்கியத்துவம் தருகிறது:*

> *தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள் (கொலோசெயர் 3:15).*
>
> *இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள் (கொலோசெயர் 4:2).*
>
> *எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1 தெசலோனிக்கேயர் 5:18).*

*"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்தல்" என்பது எத்தனை பெரிய சவால் நிறைந்த வார்த்தைகளாயுள்ளது! நாம் நன்றி செலுத்தக்கூடிய விஷயங்கள் எப்போதுமே நமக்கு நடக் கின்றன. எந்த ஒரு நிகழ்ச்சியிலும் உள்ள நன்மைகளை மட்டுமே பார்த்து, அதற்காக தேவனுக்கு நன்றி சொல்லும்*

மனிதன் கதை ஒன்று இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஒருநாள் மிகப் பயங்கரமான பனிப்புயல் உண்டாயிற்று. எல்லாமே கடினமான பனிப்போர்வையால் மூடப்பட்டன. மின்சாரம் தடைப்பட்டது, எல்லா செயல்பாடுகளுமே நின்றுபோயின. இம்மனிதன் உட்பட ஒருசிலர் மட்டும் ஜெபக்கூட்டம் ஒன்றிற்கு வந்து சேர்ந்தனர். வந்திருந்த அனைவரும், இச் சூழ்நிலையில் எந்த நன்மையை அவன் கண்டு அதற்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்துவான் என்று கேட்க ஆவலாய் காத்திருந்தனர். அவன் ஜெபிக்கவேண்டிய முறை வந்தபோது, “கர்த்தரே, தட்ப வெப்ப சூழ்நிலை இதே போன்று எல்லாக் காலத்திலும் இல்லாததற்காய் உமக்கு நன்றி செலுத்துகிறேன்” என்றான்.

நமக்கு ஏற்படும் எந்த ஒரு சூழ்நிலையிலும் உள்ள நன்மையைக் காண வேண்டியது நமது கடமையாகும். அது நன்றி செலுத்தும் நாளாகும். (அமெரிக்க தேசத்தில்) நன்றி செலுத்தும் நாள் அன்று, குடும்பத்தில் சிடுசிடுக்கும் மார்ட் என்ற மாமாவும் இருந்தார். அவர்கள் உணவு உண்ணுமுன், மேஜையைச் சுற்றி வந்து, ஒவ்வொருவரும் எந்த காரியத்துக்கு நன்றி செலுத்துகிறோம் என்பதைக் கூறுவார்கள். மார்ட்டின் முறை வந்த போது அவர், “அடுத்தவர் சொல்லுங்கள்” என்று சொன்னார். அவருக்கு அடுத்து அமர்ந்திருந்த சிறுபையன், “ஒரு நிமிஷம் பொறுங்கள், மார்ட் மாமா, நீங்கள் எந்த விஷயத்திற்கு நன்றியுள்ளவராயிருக்கிறீர்கள், என்று சொல்ல வேண்டுமே” என்றான். மார்ட் மாமா, ‘‘நன்றி சொல்லக்கூடிய எந்த விஷயமும் எனக்கு இல்லை” என்று உறுமினார். மேஜையின் நடுவில் வைக்கப்பட்டிருந்த பொன்னிறமான பறவையைப் பார்த்த அச்சிறு பையன், ‘‘நீங்கள் அந்த வான்கோழியாய் இல்லாததற்காவது நன்றி செலுத்தவேண்டும்” என்றான்.

ஒரு நன்றி செலுத்தும் நாளில், சிறுபையன் ஒருவன் “எனது கண்களின் கண்ணாடிக்காய் நான் நன்றி செலுத்துகிறேன்” என்றான். யாரோ ஒருவர் உடனே, “அவை உனக்குப் பார்க்க உதவுவதினாலா” என்றார், உடனே அவன், “இல்லை மற்ற பையன்களின் சண்டையிலிருந்தும், பெண்களின் முத்தங்களில் இருந்தும் அவை என்னைப் பாதுகாப்பதால்’’ என்றான். “எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செய்ய வேண்டும்.” நாம் நன்றி

செலுத்த எப்போதும் நம்மிடம் ஏதாவது இருந்துகொண்டு தான் உள்ளது.

நன்றியில்லாமை என்ற பாவத்தைக் குறித்தும் வேதம் பேசுகின்றது. தனது நாட்களில் இருந்த மனிதர்களின் தன்மையைப் பற்றிப் பவுல் பேசும்போது, "அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரா னார்கள்" (ரோமர் 1:21). இதன் பின்னால், பிற்கால மனிதர் களின் பரிதாப நிலையைப்பற்றி அவர் முன்னமே எழுதும் போது, "எப்படியெனில் மனுஷர்கள் தற்பிரியராயும் ... நன்றி யறியாதவர்களாயும் ..." இருப்பார்கள் (2 தீமோ. 3:2) என்று கூறுகிறார்.

பழைய புராணக் கதையொன்றின்படி, மனுஷரின் ஜெபங்களை சேகரிக்கும்படி இரு தூதர்கள் பூமிக்கு அனுப்பப் பட்டனர். அவர்களில் ஒரு தூதன் மனிதர்களின் வேண்டுதல் ஜெபங்களையும், இன்னொரு தூதன் அவர்களுடைய நன்றி ஜெபங்களையும் தங்கள் தங்கள் கூடைகளில் சேகரிக்க வேண்டி யிருந்தது. சில நாட்களுக்குப் பின்பு இருவரும் கடவுளிடம் திரும்பினர். முதலாவது தூதன் தனது கூடை நிரம்பி வழியும் படியான அநேக வேண்டுதல் ஜெபங்களை மனுஷர்களிடம் இருந்து பெற்று வந்தான். ஆனால் இரண்டாம் தூதன், ஏறக் குறைய காலியான கூடையுடன், வருத்தத்தோடும், கனத்த இருதயத்தோடும் திரும்பி வந்தான்.

மனிதர்கள் மற்றும் தேவன் ஆகியோருக்கு நன்றி கூறாமல் இருக்கக்கூடிய இப்படிப்பட்ட பல கதைகள் உண்டு. அநேக வருடங்களுக்குமுன்பு, மிச்சிக்கன் ஏரியில் ஜனக்கூட்டம் மிகுந்த எந்திரப்படகு ஒன்று கரைசேர முடியாமல் மூழ்கிய போது, உடைந்துபோன தூண்டு ஒன்றைப் பற்றிக்கொண் டிருந்த ஒரு பெண்ணை, கரையில் நின்றுகொண்டிருந்த எட்வர்ட் ஸ்பென்சர் என்ற மாணவன் பார்த்தான். உடனே அவன் தனது மேல்கோட்டை கழற்றி எறிந்துவிட்டு, கனத்த அலைகளினூடே நீந்திச்சென்று அவளைக் கரைக்கு கொண்டு வந்து சேர்த்தான். மேலும் பதினாறு முறை அவன் அவ்வலை களினூடே வீரமாகச் சென்று, மொத்தம் பதினேழு பேரை மீட்டுக்கொண்டு வந்தான். பின்பு அவன் மூச்சிரைத்து

விழுந்தான். அவன் எஞ்சிய வாழ்நாளில் அம்முயற்சியினால் ஏற்பட்ட ஆரோக்கியக் குறைபாட்டிலிருந்து மீளவே முடியாமல், வியாதிப்பட்டவனாகவே வாழ்ந்தான். சில ஆண்டுகளுக்குப்பின் அவன் மரணமடைந்ததாக செய்தித்தாளில் வந்த அறிவிப்பில், அவனால் மீட்கப்பட்ட பதினேழு பேரில் ஒருவர் கூட அவனுக்கு நன்றிசொல்ல வரவில்லை என்று கூறப்பட்டது.

எப்படியிருப்பினும் மற்றவர்களை நியாயம் தீர்ப்பது நமது வேலையல்ல. நாம் நம்மைக்குறித்து அக்கறைப்படவேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோமா? நம்மையே நாம் சில நிமிடங்கள் சுயபரிசோதனை செய்துகொள்வோம்.

நமது குடும்பங்களில் நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்கின்றோமா? பவுல் 2 தீமோ. 3ல் மனிதகுலத்தின் பாவங்களை வரிசைப்படுத்தும்போது, "தாய், தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாமை" யை அடுத்து, "நன்றியறியாமை" பற்றி எழுதுவது தற்செயலானதா? அது தற்செயலானதா அல்லவா என்று எனக்குத் தெரியாது. ஆனால் நம்மில் அநேகர் நமது பெற்றோர்களிடம் நன்றியில்லாதவர்களாயிருக்கிறோம். சில சமயங்களில் நம்மை ஒருவாரம் கவனிக்காமலிருந்திருந்தால் நாம் உயிர் இழக்க நேர்ந்திருக்கும். நமது சிறுவயதில் நாம் ஒவ்வொரு விஷயத்திற்கும் நமது பெற்றோரையே சார்ந்திருந்தோம். ஆனால் வயதான பெற்றோர்கள் இளைஞர்களுக்குப் பாரமாகி விடுகின்றனர், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையைப் புறக்கணிக்கின்றனர். ஷேக்ஸ்பியர் எழுதிய "கிங் லியர்" என்ற கதாபாத்திரம் தன் சொந்த துக்ககரமான நாளில் சொன்னது போல்: "பாம்பின் பல்லைவிட கூர்மையானது ஒரு நன்றியில்லாத குழந்தை இருப்பதாகும்."

நம்முடைய சக மனிதர்களுக்கு நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோமா?: நமது சக மனிதர்களிடம் நமது நன்றியில்லாமையை நினைக்கும்போது, அநேக வேத உதாரணங்கள் சிந்தனைக்கு வருகின்றன. லாபான் தனது மருமகனாகிய யாக்கோபின் உழைப்பைப் பாராட்டவில்லை (ஆதி. 31:6-7); சிறையிலிருந்த யோசேப்பை பானபாத்திரக்காரன் மறந்தான் (ஆதி. 40:23); தங்களை விடுவித்து அழைத்து வந்த மோசேயை

இஸ்ரவேல் ஜனங்கள் கல்லெறியத் தயாரானார்கள் (யாத். 17:1-4); தாவீதினால் உயிர்காக்கப்பட்டும்கூட தாவீதைக் கொலைசெய்யத் தேடினான் சவுல் (2 சாமுவேல் 16:1-2).

நாம் ஒவ்வொருவரும், அநேக ஜனங்களுக்கு பெரிய அள வில் கடன்பட்டுள்ளோம். இவர்கள் நமது நண்பர்கள், கிறிஸ்து வுக்கு சகோதர சகோதரிகள் அல்லது நமது ஆசிரியர்களாயிருக் கலாம். நம்மில் சிலர் நமது உயிரைக்காத்த மருத்துவர்கள், அறுவைச் சிகிச்சை நிபுணர்கள், ஆகியோருக்கு கடன் பட்டிருக் கலாம். இவர்களுக்கெல்லாம் நாம் நன்றி கூறினோமா? இன்னும் தாமதிக்காமல் இப்போதே இதைச் செய்வோம்.

நன்றி கூறுவதைப்பற்றிப் பேசிய ஒரு பிரசங்கியார், "பரதீசில் தொலைபேசி கிடையாது" என்றார். (நான் அங்கு செல்வதற்கு விரும்புகின்ற காரணம் இது ஒன்றே போது மானது!) அவர் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஒருவர் அங்கு சென்றுவிட்டால், அவருக்கு இங்கிருந்து நாம் நன்றி சொல்ல முடியாது. பில் என்ற ஒரு நண்பர் எனக்கு ஒரு முறை பெரிய உதவி செய்தார் - ஆனால் நான் அவருக்கு முறைப்படி நன்றி செலுத்தவில்லை. அவர் மரித்தபிறகு நான் தொலை பேசியை எடுத்து, "எனக்கு மிக நீண்ட தொடர்பு ஒன்று கொடுங்கள். நான் சொல்வது மி-க-நீ-ண்-ட-தொடர்பு ஆகும். நான் பரதீசில் பில்லுடன் பேச விரும்புகிறேன். நீங்கள்தானா அது? நன்று, உங்களுக்கு நன்றிசொல்லவே நான் உங்களை அழைத்தேன்" என்று சொல்லமுடியாது!

சில சமயங்களில் சவ அடக்கத்தின் போது, சிலர் உயிரற்ற உடலைப் பார்த்து, இதற்குமுன் கூறாத சில வார்த்தைகளை, "உங்களை அன்பு செய்கிறேன்! உங்களைப் பாராட்டுகிறேன்! உங்கள்மேல் அக்கறையாய் இருக்கிறேன்!" என்கின்றனர். இது மிகவும் தாமதமான செயல்பாடு ஆகும்.

டெக்ஸாஸில் உள்ள மிகவும் பிரபலமான வியாபாரி ஒருவர் தனது நண்பர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்குத் தருவதற் கென்று ஒரு புத்தகத்தை அச்சிடச் செய்தார். அப்புத்தகத்தின் மேல்அட்டையில் "பத்து லட்சம் நன்றிகள்" என்று தலைப் பிடப்பட்டு இருந்தது. உட்பக்கம், "நன்றிகள்" என்ற வார்த்தை பத்து லட்சம் முறை அச்சிடப்பட்டிருந்தது. நமக்கு உதவினவர் கள், நம்மை ஊக்கப்படுத்தினவர்கள் ஆகியோருக்கு நம்மில்

அநேகர் பத்து லட்சம் தடவைகளுக்கு மேல் நன்றிசொல்ல வேண்டியிருக்கும்.

''அதைச் சொன்னால் என்ன'' என்ற தலைப்பில் ஜெரால்டின் ஸியர்பாஸ் என்பவர் பின்கண்ட வரிகளை எழுதி வைத்துள்ளார்:

*நீங்கள் செல்லும் நீண்ட வழியில்,*
*உங்கள் அயலார் சிறிது உதவினால்;*
*உங்கள் பாரம் அதினால் குறைந்தால்?*
*அவரிடம் நீங்கள் அதைச் சொன்னால் என்ன!*
*புலம்பல் மற்றும் துயரத்திலிருந்து*
*ஒரு கரம் உங்களை உயரத் தூக்கினால்;*
*முதிய நண்பர் உங்கள் கவலையைப் பகிர்ந்தால்?*
*அவரிடம் நீங்கள் அதைச் சொன்னால் என்ன!*

*பரலோகத்தின் தந்தை உங்களுக்கு*
*பலவித ஆசீர் அளித்திருக்கையில்*
*அவருக்கு முன்னால் முழந்தாளிட்டு*
*உண்மையாய், களிப்பாய் அதைச் சொன்னால் என்ன![13]*

இது நம்மை நமது சுயபரிசோதனையின் முக்கிய பகுதிக்கு கொண்டுவந்து சேர்க்கிறது: நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர் களாயிருக்கிறோமா? நாம் எல்லோருமே தேவனிடத்தில், ''உமக்கு நன்றி'' என்று சொல்லுவதில் வெகுவாகத் தவறு கின்றோம். சங்கீதக்காரன், ''என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி! அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" (சங்கீதம் 103:2) என்கிறார். இவ்விடத்தில் அவர் கூறும் "சகல உபகாரங்கள்" என்பது என்ன? மத்தேயு 5:45ல் நமக்கு கூறப் படும் உபகாரத்திலிருந்து நாம் தொடங்கலாம்: "அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்.'' நமக்கு சூரியவெளிச்சம், மழை, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மலர்கள், மரங்கள், பறவை கள், கனிகள், முட்டைகள் மற்றும் வெண்ணெய் முதலானவை உள்ளன, நமது அன்றாடப் பணிகளும் நமக்கு உள்ளன.

இவைகளுடன்கூட, அந்த சமாரியனுக்கு இயேசு அளித்ததைப்போன்ற விசேஷித்த ஆசிர்வாதங்களும் "செய்தார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்" (1 சாமுவேல் 12:24). நீங்கள் எப்போதாவது வியாதிப்பட்டு பின்பு சுகமடைந்திருக் கிறீர்களா?[14] நீங்கள் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் வளர்ந்த

வர்களா? சுவிசேஷத்தைக் கேட்டு, அறிந்து அதற்குக் கீழ்ப் படியும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்ததா? நீங்கள் ஒரு கிறிஸ்தவப் பள்ளியில் கல்வி பெற்றீர்களா? கர்த்தரை ஏற்றுக் கொண்டவர் உங்கள் துணைவ ராக அமைந்துள்ளாரா? கர்த்தர் உங்களுக்குக் குழந்தைகளைக் கொடுத்துள்ளாரா? தேவனு டைய மாபெரும் பரிசுத்தவான்களை அறியும் சிலாக்கியம் உங்களுக்குக் கிடைத்துள்ளதா? எந்தவொரு பெரிய போதகருக்கும் கூட, தனக்குக் கிடைத்துள்ள அநேக ஆசீர் வாதங்களை எண்ணிக் கணக்கிடுவது தான் மிகவும் கடினமான கணக்காகும் என்று ஒருவர் கூறினார்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக, நாம் அனைவரும், "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவு" (2 கொரி. 9:15) என்று பவுல் அழைக்கும் இயேசு என்னும் ஈவுக்காக மிக்க நன்றி செலுத்த வேண்டும். இரண்டாம் உலக யுத்தத்தின்போது இங்கிலாந்து நாட்டைக் காவல்செய்த ராயல் விமானப்படை வீரர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கையில் வின்ஸ்ட்டன் சர்ச்சில், ''மனிதகுல வரலாற்றில் வெகு சிலருக்கு வெகு அதிகமாய் நன்றிசெலுத்தும் இச்சம்பவம்போல என்றும் நடை பெற்றதில்லை'' என்றார். இயேசுவைப் பொறுத்தமட்டில் இவ்வார்த்தைகள் உண்மையானவையே: "இந்த அகிலத்தின் வரலாற்றில், ஒருவருக்கு வெகு அதிகமாய் நன்றி செலுத்தும் இதுபோன்ற சம்பவம் வேறு எதுவுமில்லை."

கர்த்தர் நமக்குச் செய்துள்ளவற்றிற்கு நாம் எவ்வளவாய் நன்றியை எவ்விதம் விளங்கப்பண்ணுகிறோம்? நாம் கர்த்தரு டைய பந்தியைச் சுற்றிலும் அமர்ந்திருக்கும்போது, ''மற்ற ஒன்பது பேர் எங்கே?" - காணிக்கை செலுத்தும் நேரத்தில் - "மற்ற ஒன்பது பேர் எங்கே?" ஞாயிறு மாலை அல்லது புதன் மாலை கர்த்தரைத் துதிக்க நாம் கூடிவரும்போது "மற்ற ஒன்பது பேர் எங்கே?" வீடு சந்திப்பு அல்லது சுவிசேஷ ஊழியத்திற்குச் சென்று நமது மாபெரும் ஆசீர்வாதமாகிய இரட்சிப்பை பகிர்ந்துகொள்ளும் வேளையில் "மற்ற ஒன்பது பேர் எங்கே?"

தேவன் உங்களுக்குச் செய்த எல்லாவற்றையும் சற்று நேரம் சிந்தித்துப் பாருங்கள், பிறகு அவருக்கு நன்றி சொல்லுங்கள். "மற்ற ஒன்பது பேர் எங்கே" என்று கனத்த இருதயத்துடன் அவர் கேட்கும்படி விடாதீர்கள்.

## முடிவுரை

*உங்கள் நன்றியை, அவருடைய கட்டளையைக் கடைப்பிடிப்பதன் மூலம் நடைமுறைப்படுத்துவது மிகச் சிறந்த வழியாகும். நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியது இருப்பினும்-தவறு செய்யும் பட்சத்தில் மறுபடி தேவனோடு கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியம் என்று நீங்கள் உணர்ந்தால்-அந்த அவசியமான செயலை இன்றே செய்தால் நன்றல்லவா? உண்மையிலேயே தேவன் உங்களுக்குச் செய்தவற்றை நீங்கள் உணர்ந்தால் நீங்கள் தாமதிக்கவோ, தயங்கவோ மாட்டீர்கள்!*

---

*குறிப்புகள்*

*[1]லூக். 9:51; 13:22. [2]லேவி. 13:46; எண். 5:2-3. [3]யோவான் 4:9. [4]"குஷ்டரோகம்" என்ற வார்த்தை நமது நாட்களில் கூறும் பொருளைக் காட்டிலும் வேதாகமத்தில் விரிவான பொருளுடையதாயிருக்கிறது. [5]உங்கள் செய்தியைக் கேட்பவர்கள் புரிந்து கொள்ளும் ஒரு ஒப்புவமையைக் கூறுங்கள். [6]லேவி. 14:2*ff. *[7]பழங்காலப் பிரதி ஒன்றில்மட்டும் இயேசு அவர்களை அவ்விடத்திலேயே குணமாக்கினார் என்று கூறப்படுகிறது. மற்றவை அப்படிக் கூறுவதில்லை. இயேசுவின் அற்புத குணங்களின் போதுள்ள சூழ்நிலைகள் மிக ஆச்சரியமானவை என்பது குறிப்பிடத்தக்கது. "இயேசுவின் அற்புதங்களில் உள்ள மாபெரும் தனித்தன்மைகள் அவைகள் தேவனிடமிருந்து புறப்பட்டவை என்பதைக் குறிக்கின்றன" (லூக்கா விளக்கவுரை (அபிலைன், டெக்ஸ்:* A.C.U. *அச்சகம், 1975), 340), என்ற பர்ட்டன் காஃப்மெனின் நூலின் பகுதியில் அறியலாம். [8]வசனம் 19ல் இயேசு, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று சமாரியனிடம் கூறினார். [9]சமாரியர்கள் வேதத்தில் முதல் ஐந்து நூல்களை மட்டுமே நம்பினர். அதில் குஷ்டரோகம்பற்றிய விதிமுறைகள் கூறப்பட்டிருக்கிறது. [10]காஃப்மென், 341.*

[11]NASB*யில் இக்குறிப்பு, "உன்னை இரட்சித்தது" என்றுள்ளது. [12]"நன்றியே விசுவாசத்தை நிறைவு செய்கிறது" என்பது ஒரு பழமொழி. [13]ஏலனர் டோவன் என்பவரால் பிரசங்கியாரின் "மூலநூல்" என்ற நூலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. (கிரான்ட் ரேப்பிட்ஸ், மிச் ஜோன்டர்வோன் பப்ளிஷிங் ஹவுஸ், 1962), 262. [14]கேட்கின்றவர்களின் விசேஷித்த ஆசிர்வாதங்களைப்பற்றிக் கேட்கலாம். இப்பாடத்தில் உள்ளவற்றிலிருந்து அவை வேறுபடலாம்.*